DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC No. 163/22 Crime No. 167/20 Station: AMMAPETTAI

| | | | |
|---|---|---|---|
| Name | PW1- சுப்ரமணியம் | Caste | |
| Father Name | பழனியப்பன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | 59 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 12.07.2023 |

**எதிரி இளையராஜா ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் குருவரெட்டியூர், சாணாத்திக்கல்மேட்டில் குடியிருந்து கொண்டு, கரும்பு வெட்டும் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன சிவகாமி எனது மனைவி ஆவார். கடந்த 14.06.2022 அன்று எனது வீட்டிற்கு கிழபுறமுள்ள தண்ணீர் பைப்பில் தண்ணீர் பிடித்து கொண்டு எனது மனைவி ரோட்டை கடப்பதற்காக மண்ரோட்டில் நின்றிருந்தபோது, குருவரெட்டியூரிலிருந்து பூதப்பாடி செல்வதற்காக வந்த பைக் எனது மனைவியின் மீது மோதியது. எனது மனைவி சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். அந்தியூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். பிறகு மறுநாள் பிரேத பரிசோதனை நடந்தது. பிரேத விசாரணையின்போது எனது மனைவியின் பிரேதத்தை அடையாளம் காட்டி நான் உடனிருந்தேன். விபத்து தொடர்பாக அம்மாபேட்டை காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கைரேகை என்னுடையதுதான். **மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர்தான் என் மனைவி மீது பைக்கை மோதியவர். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை-**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய, கால அவகாசம் கூறியதால், மாண்புமிகு உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின்படி, விசாரணை முடிக்கப்பட்டது.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC No. 163/22 Crime No. 167/20 Station: AMMAPETTAI

| | | | |
|---|---|---|---|
| Name | PW2-முருகன் | Caste | |
| Father Name | சுப்ரமணி | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | 34 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 12.07.2023 |

**எதிரி இளையராஜா ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் குருவரெட்டியூர், சாணாத்திக்கல்மேட்டில் குடியிருந்து கொண்டு, கூலி வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன சிவகாமி எனது அம்மா ஆவார். கடந்த 14.06.2022 அன்று எனது வீட்டிற்கு கிழபுறமுள்ள தண்ணீர் பைப்பில் தண்ணீர் பிடித்து கொண்டு எனது மனைவி ரோட்டை கடப்பதற்காக மண்ரோட்டில் நின்றிருந்தபோது, குருவரெட்டியூரிலிருந்து பூதப்பாடி செல்வதற்காக வந்த பைக் எனது அம்மாவின் மீது மோதியது. எனது அம்மாவிற்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. எனது அம்மா சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். அந்தியூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். பிறகு மறுநாள் பிரேத பரிசோதனை நடந்தது. பிரேத விசாரணையின்போது எனது அம்மாவின் பிரேதத்தை அடையாளம் காட்டி நான் உடனிருந்தேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர்தான் என் அம்மா மீது பைக்கை மோதியவர். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை-**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய, கால அவகாசம் கூறியதால், மாண்புமிகு உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின்படி, விசாரணை முடிக்கப்பட்டது.